


அமைச்சர் மா சுப்பிரமணியன் சைதை வார்டுகள்168 , 172 க்குட்பட்ட ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் சிட்கோ அலுவலக சாலை ஆகிய இடங்களில் ஏற்கனவே உள்ள பழைய பேருந்து நிழற்குடைகளை அகற்றிவிட்டு, ரூ.5.93 கோடி மதிப்பீட்டில் புதிய இழுவிசை கூரையிலான பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினைத் தொடங்கி வைத்து, அதற்கான வரைபடத்தினைப் பார்வையிட்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இதில் துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் ஆர்.துரைராஜ், எம். கிருஷ்ணமூர்த்தி , மோகன்குமார் எம்.சி., இ.முருகேசன், எஸ்.ராதாகிருஷ்ணன் , எஸ்.பாட்சா, வேல்முருகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி. நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# கலைஞர் நகரில் கலைஞர் பிறந்த நாள் விழா - நல உதவிகள் வழங்கல்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் — ஈரோடு இறைவன் சிறப்புரை!

சென்னை, அக்.11-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா முன்னிட்டு விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி - தலைமை செயற்குழு உறுப்பினர். சென்னை மாநகராட்சி - நிலைக்குழு கணக்கு மற்றும் தணிக்கைக் குழுத் தலைவர் .க.தனசேகரன் ஏற்பாட்டில் கே.கே. நகர் ஏ.கே. அறக்கட்டளை அலுவலகம் அருகில் நாளை (12.10.2025 - ஞாயிறு) நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர். மா. சுப்பிரமணியன், தலைமைக் கழக பேச்சாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி. பிரபாகர ராஜா எம்.எல்.ஏ., கவிஞர் காசிமுத்து மாணிக்கம், பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., தொகுதி மேலிடப் பார்வையாளர் வே.உமாகாந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், பி.எஸ். முருகேசன், எஸ்.டி.தங்கராசன், மாவட்ட துணைச் செலயாளர் வாசுகி பாண்டியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழி தனசேகரன், பொன்.லோகு எம்.சி., ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., நிலவரசி துரைராஜ் எம்.சி., ஆர்.சசிகுமார், நிஷா சையத், பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.உமாபதி, எஸ். ரவி, பெ. தியாகு, அ.பாபு, வடக்கு பகுதி நிர்வாகிகள் கமலக்கண்ணன், எஸ்.விஜயகுமார், சா. நாகராசன்,

பி. விஜயலட்சுமி, து.ரஞ்சித குமார், வட்ட கழக செயலாளர்கள் அ.கதிரேசன், சோ. செந்தில்குமார், ராஜ்.செழியன், ஆர்.பழனிச்சாமி, ஐம்பு முருகன், எஸ். மைக்கேல், மு. கோவிந்தராசன், வி.ஏ.ராஜா, எஸ்.பாஸ்கரன், ஆர்.பாபு மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

137 அ வட்ட கழக செயலாளர்கள்- வழக்கறிஞர் கே.சதீஷ்கண்ணன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடு : ஏ.கே. கல்வி அறக்கட்டளை மகளிர்

### அண்ணாநகர் மண்டலத்தில்

# “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாம்!

சென்னை,அக்.11

அண்ணாநகர் மண்டலம், செனாய் நகர், புல்லா அவென்யூ சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நாளை (11.10.2025 (சனிக்கிழமை)) “நலம் காக்கும் ஸ்டாலின்“ திட்ட முகாம் ஆறாவது கட்டமாக நடைபெறவுள்ளது. இந்த மருத்துவ முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்று வருகிறது.

இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்தியமுறை மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம் மற்றும் ஸ்கேன் பரிசோதனை ஆகிய 17 துறைசார் நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகள், அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனை, முழுமையான உடல் ஆரோக்கிய பரிசோதனை, காசநோய், தொழுநோய் பரிசோதனை, ஆரம்ப புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை ஆகிய மருத்துவ சேவைகள் வழங்கப்படுகிறது.

மேலும், முதலமைச்சரின் விரிவாக மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர் அடையாள அட்டை வழங்குதல், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பிரச்சாரம் போன்ற இணைச் சேவைகளும் வழங்கப்படுகிறது.

அண்ணாநகர் மண்டலம், புல்லா அவென்யூவில் உள்ள சென்னை மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நாளை (11.10.2025) நடைபெறவுள்ள “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாமில் பொதுமக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### துறைமுகம் மேற்கு பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர்

# பூக்கடை எஸ்.வெங்கடேசன் தந்தை எம்.சுப்பிரமணி மறைவு!

## பகுதிச் செயலாளர் எஸ்.முரளி - கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக். 11

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளரும், கலைஞர் நினைவிடத்தில் மலர் மாலை அலங்கரிப்பவருமான பூக்கடை எஸ்.வெங்கடேசனின் தந்தை எம்.சுப்பிரமணி அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2025 வியாழக்கிழமை) மதியம் 1.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் உடல் அவர்களது சொந்த ஊரான விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம், சின்னதச்சூரிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்கு வைக்கப் பட்டிருந்தது.

அன்னாரது உடலுக்கு துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி மலர் மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தினார்.

மேலும், வட்டச் செயலாளர் பா.அண்ணாதுரை, பகுதி துணை செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜெ.ஹரிக்குமார், வட்ட துணைச் செயலாளர் சி. காந்தி, வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.உதயகுமார் மற்றும் கழக தோழர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் உடலுக்கு இறுதி மரியாதை நேற்று (10.10.2025 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் தகனம் செய்யப்பட்டது.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்ட்டில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமினை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி துவக்கி வைத்து பயனாளிகளுக்கு ஆணையை வழங்கினார். முகாம் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் தலைமையில் நடைபெற்றது. இதில் 147 வது வட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன், வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளரும், கலைஞர் நினைவிட மலர் மாலை அலங்கரிப்பவருமான பூக்கடை எஸ்.வெங்கடேசனின் தந்தை மறைந்த எம்.சுப்பிரமணி உடலுக்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி மலர் மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். உடன் வட்டச் செயலாளர் பா.அண்ணாதுரை, கே.ஆர்.அபரஞ்சி, டி.எஸ்.சேகர், ஜெ.ஹரிக்குமார், சி.காந்தி, எம்.உதயகுமார் மற்றும் கழக தோழர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (09.10.2025) சென்னை, அண்ணா நகர், திருமேனியம்மன் திருக்கோயிலில் திருப்பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மண்டல இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, சு.மோகனசுந்தரம், திருமதி ஜ.முல்லை மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### கலாநிதி வீராசாமி எம்.பி. – ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. – வ.பெ.சுரேஷ் – ஜெ.கௌரீஸ்வரன் பங்கேற்பு!

# இராயபுரம் 53 ‘அ’ வட்டத்தில் சமபந்தி விருந்து!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

சென்னை, அக்.11-

இராயபுரம் 53 ‘அ’ வட்டம் எண்.10- பென்சினர்ஸ் லைனில் திருப்பதி திருக்குடை திருவிழாவை முன்னிட்டு இன்று (11.10.2025 - சனிக்கிழமை) பகல் 12 மணியளவில் சமபந்தி விருந்து நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சியை சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் வ.பெ.சுரெஷ், 53வது (அ) வட்ட செயலாளர் ஜெ.கௌரீஸ்வ ரன், மாமன்ற உறுப்பினர் பா. வேளாங்கண்ணி ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இதில் எஸ்.புகழேந்தி, எம்.எல்.ரவி, கொரியர் பி.முருகன், இரா.பாலன், பாலா லட்சுமணன், இ.மதிவாணன், ஏ.சக்திவேல், பி.ஆகிபிரகாஷ், ஆர்.வாசு, இ.ரகு, கே.கோபி, டபிள்யு.ஏ.சார்லஸ், க.ஜெயசீலன், எம்.செந்தில்குமார், எம்.விஜய சண்முகம், எஸ். செல்வநாதன், யு.பி.ஜெயராமன், சி.தமிழ்தென்றல், பி. திருப்பதி, ஜி.பிரபாகரன், பி.எஸ்.மோகன்ராஜ், பி.ராஜ்கமல், ஏ.டி.ராம்பாபு, ஏ.என். லோகேஷ், ஏ.தானைய்யா, ஏ.பூபதி, சி.டி.ராஜா, பி.என். ஆதி, ஏ.ஆர்.சலபதி, என்.சுப்பாராவ், எம்.மகேந்திரன், எம்.பிரசன்னா, பி.சாமுவேல், ஏ.ஆர்.வெங்கட், ஏ.சீனிவாசன், பி.கோபி குட்டி (எ) ஏ.அருண்குமார், எல்.ஜி.பார்த்திபன், எம்.கலைவாணன், எஸ்.ராதா, எம். கதிர் அகமது, இ.தமிழ் செல்வி, எம்.இமையாள், ஜெ.அனுசியா விஜய், ஜி. கார்த்திகேயன், எம்.மணிமேகலை, ஏ.பி.பரத்ராஜ், டி.ரவி, ஜி.பிரபுதாஸ் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஏ.பாஸ்கர், ஏ.பி.தனலட்சுமி, கே.ஆர்.கௌசல்யா, டி.சீனிவாசன், கோசிபாதல அக்கம்மா, என்.ராமையா, என்.ஆர்.பென்சிலம்மா, சி. திருப்பால், சி.டி.பென்சிலம்மா, பி.புருஷோத்தமன், ஏ.ஆஷாதேவி ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளனர்.




தாம்பரம் மாநகரம் செம்பாக்கம் தெற்கு பகுதி 41,வது வட்ட செயல் வீரர்கள் கூட்டம் வட்ட அவைத் தலைவர் ஐ.சாமிக்கண்ணு தலைமையில், நடைபெற்ற கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளரும் அயலக அணியின் செயலருமான பரிதி.இளம்சுருதி எம்.சி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் எஸ்.கற்பகம்,பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள்,வட்ட கழக நிர்வாகிகள்,வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள்,பாக நிலை முகவர்கள் BLA2,பாக டிஜிட்டல் ஏஜென்ட் BDA, கழக மூத்த முன்னோடிகள், கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.


எங்கள் முகவரிக்கு

7 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 24.05.1975

மறைவு 11.10.2018

சி.சி.கதிரவன் DHMCT., MTM

என்றும் நினைவில்...

அன்னை. சி.சின்னம்மாள் சின்னச்சாமி Ex.MC துணைச்செயலாளர் மதுரை மாநகர் திமுக

இளையவன். சி.சி.கதிரவன் உதயா மாவட்ட பிரதிநிதி, மதுரை மாநகர் திமுக

இளையவள். சி.சி.தமிழ் செல்வி துணை அமைப்பாளர், தகவல் தொழில் நுட்ப அணி, மதுரை மாநகர் மாவட்ட திமுக

இளையவள். சி.சி.வளர்மதி சின்னூஸ் டிரைவாஷ், போடி

இணையால் : க.பாண்டீஸ்வரி கதிரவன் சின்னூஸ் பார்லர் மதுரை

மனைவி, மகன்கள், மகள்கள், அண்ணன்கள், தம்பிகள், தங்கைகள், மைத்துனர்கள், நண்பர்கள், உற்றார் - உறவினர்கள் மற்றும்

நியூ கதிரவன் பேக்கரி - நியூ கதிரவன் ரிலாக்ஸ் கார்னர்

நியூ கதிரவன் பஸ் சர்வீஸ் - நியூ கதிரவன் விவசாய பண்ணை

ஊழியர்கள் - ஆரப்பாளையம், மதுரை